
# நாச்சியார் அந்தாதி



நாகு. பரமசாமி



யாழ்ப்பாணம்

அரியாலை மேற்கு

வெட்டுக்குளம்

(புவனேஸ்வரி அம்பாள்)

# நாச்சியார் அந்தாதி

— நாக. பரமசாமி —

தொடர்புகளுக்கு :-

நாக. பரமசாமி
''கனகாம்பரம்'',
26, கலைமகள் வீதி,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.



# சமர்ப்பணம்

‘‘ஈன்றாளும்மாய் எந்தையுமாய்
ஈண்டிவ் வுலகில் வாழ்ந்தின்றும்
தோன்றாத் துணையாய், என்பொருட்டுத்
துலங்கித் துயரைப் போக்கிவரும்
சான்றோர் மூலம் தன்னுணர்வைத்
தமியேற் களித்த அம்பிகையின்
தேன்றா வியபூம் பதங்கட்கே
செய்தே னிம்மலர் அர்ப்பணமே’’

— ஆசிரியன் —

உ

# யாழ்ப்பாணம் நல்லை ஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் வழங்கும் அருளாசியுரை

பழுதிலாச் சொல் மணிகளால் அம்பிகைக்கு அந்தாதி பாடியுள்ளார்கள் கவிஞர்திலகம் திரு. நாக. பரமசாமி அவர்கள். யாழ்ப்பாணம் அரியாலையில் எழுந்தருளியுள்ள அன்னை புவனேஸ்வரிமீது பைந்தமிழ்ப் பாமாலை பக்திமணம் கமழச், சிவானந்தத்தேன் சொட்ட, பக்தியுடன் பாதமலரிற் சூடியுள்ளார் இக்கவிஞர். சொல்லும் பொருளும் இணைந்துள்ள இக் கவிதைமலர் கருத்தைக் கவர்கின்றது. கவிஞருக்கு எம் ஆசிகள்.

—ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த
பரமாச்சாரிய ஸ்வாமிகள்

ஆதீனம், நல்லூர்.
20-8-79

நல்லூர் வட்டக் கல்வியதிகாரியும்,
தமிழறிஞரும், சைவநெறிச் சீலருமான

## உயர்திரு. கு. சோமசுந்தரம்

அவர்கள் வழங்கும்

# அணிந்துரை

ஓம் சக்தி

உள்ளத்து எழுச்சி, அதிலும் அருள் எழுச்சி, பா வடிவம் பெறுகின்றது. அன்னையின் அருளால் மலர்ந்த இப்பாமாலையை அந்த அன்னையின் பாதாரவிந்தங்களுக்கே சமர்ப்பித்து மேலும் அருளைப் பெற்றவர் ஆகின்றார் கவிஞர். தாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம், என்ற வகையால். தாம் யாத்த, அருள் நிறை அன்னையின் மீதான அந்தாதிப் பாடல்களை, மற்றோரும் ஓதி உயர்வு பெற வேண்டும் என்று, கவிஞர் அப்பாடல்களை நூல்வடிவத்தில் கொண்டு வந்தமை வரவேற்க வேண்டியது.

பொய்ம்மையையும், பொய்ம்மையாளரையும் கவிதைக்குக் கருப்பொருளாகக் கொண்டு படைப்புப் பல படைக்கும் புற்றீசல் போன்ற கவிராயர்கள் மலிந்துள்ள இக் கலிகாலத்தில், மெய்ம்மையாம் ஆதிபராசக்தியைப் பாட, இக் கவிஞர் முனைந்ததும் அன்னையின் அருளே என்போம்.

கவித்துவம் எல்லோருக்கும் கிடைக்கக்கூடியது அன்று. கிடைக்கப் பெற்றவர்கள் அதைத் துஷ்பிரயோகம் செய்யாதிருப்பார்களாக. திரு. நாக. பரமசாமி அவர்கள் தாம் பெற்ற கவித்துவத்தை, அன்னையைப் பாடுதலுக்கே பயன்படுத்தியமையால், நற்பிரயோகம் செய்த புலவர்கள் வரிசையில் இடம் பெற்றவராகின்றார்.

ஓம் சக்தி

கு. சோமசுந்தரம்

நல்லூர்
12-9-79

# வெளியீட்டுரை

ஓம் பராசக்தி

அரியாலை, வெட்டுக்குளம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பிகையின் மீது பாடப்பெற்றுள்ள அருட்பாடல்களைக் கொண்ட "நாச்சியார் அந்தாதி" என்னும் நூலை வெளியிடும் பாக்கியம் அடியேனுக்குக் கிடைத்தது அன்னையின் அருட்சிறப்பே!

அம்பிகை மீதும், அவள் தலத்தின் மீதும் பாடப்பட்ட முதலாவது நூல் இதுவே என்பது, மேலும் என் மகிழ்ச்சியை இரட்டிப்பாக்கிறது!

ஆதி மனிதன் தமிழன் என்பதும், அவன் சக்தி வழிபாடாற்றியவன் என்பதும் சரித்திரம் கண்டவுண்மை தொன்றுதொட்டே அம்பிகைக்கு வழியடிமை செய்துவந்த நம்மத்தியில் அமைந்துள்ள ஆலயத்தின் தலவிருட்சம் நூற்றைம்பது ஆண்டுகட்கு மேலான பழைமையுடையது. எனவே தலவரலாறு எத்துணைப் பழைமை வாய்ந்தது என்பதைக் கூறவேண்டியதில்லை.

இவ்வாலயத்தின் மூன்றாவது மகா கும்பாபிஷேகம். சித்தார்த்தி ஆனித் திங்களில் வெகு சிறப்பாக நடந்தேறியது. இதன் சிறப்பம்சமாக, எமது ஆசிரியர் திரு. நாக. பரமசாமி அவர்களின் 'அந்தாதி' அம்பாளின் பாதங்களில் சமர்ப்பணம் செய்யப்பட்டது. மிகவும் பொருத்தமானதே, பாராட்டுக்குமுரியதே!

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனக் குருமகா சந்நிதானம், இந்நூலாசிரியரைக் "கவிஞர் திலகம்" என அழைத்தது. சாலவும் பொருந்துவதே! இதனைத் தொடர்ந்து இன்னும் பல நூல்கள் இவரால் வெளிவர வேண்டுமென்பது எமது பேரவா!

அன்னையின் அருள்நாட்டம் வேண்டுபவர்கள் தினந்தோறும் இதனைப் பாராயணம் செய்தால் தாம் வேண்டியது கைகூடப் பெறுவர் என்பது ஒருதலை.

இதன் ஆசிரியர் தொண்டு மேலும் வளர்ந்து சிறப்பதாகுக!

இறுதியாக, இந்நூலை வெகு அழகாக அச்சிட்டு வெளியிடுவதில் துணைபுரிந்த யாழ். ஆசீர்வாதம் அச்சக ஊழியர்க்கு எமது நன்றிகள்.


நாக. முருகேசன்
முன்னாள் யாழ். கச்சேரி சுவடி காப்பாளர்
'பார்வதி வாசம்'
அரியாலை, யாழ்ப்பாணம்.


கன்னித்திங்கள்,
சித்தார்த்தி வருடம்,
1979.

" அம்பிகையின் பூங்கழல்கள் போற்றி "

# நூன்முகம்

இந்நூலை யான் எழுதினேனு? நம்பவே முடியவில்லை. அவனருளாலேயே அவன்றுள் வணங்க முடியும் என்ற மணிவாசகப் பெருந்தகையின் வாக்குக்கு இந்நூலே எடுத்துக்காட்டாய் விளங்குகிறது என்பதைத் திரிகரண சுத்தியோடு சொல்லிக் கொள்வதன்றி வேறெதுவும் கூறவியலவில்லை.

அன்னையாம் அம்பிகையின் புகழ்பாட வேண்டும் என்ற ஆவல் திடீரென எழுந்ததும், அது இவ்வாறுன நூல் வடிவாக உருப்பெற்றதும், ஈழத்தில் சைவத்துக்கும் தமிழுக்கும் அரணுகவும், அரசாகவும் இன்று விளங்கிவரும் யாழ். நல்லை ஆதீன முதல்வர், ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் கையெழுத்துப் பிரதியைப் பார்வையிட்டதும், மணிவாசகர்க்குப் பரஞ்சோதி முனிவர் வழங்கிய வாழ்த்துக்கு நேரான அருளாசியுரை வழங்கியதும், நல்லூர் வட்டக் கல்வியதிகாரியும், கல்விமானும், எழுத்தாளரும், சைவ நெறியில் ஒழுகுபவருமான திரு. கு. சோமசுந்தரம் அவர்கள், அணிந்துரை வழங்கியதுமான நிகழ்வுகள், இப் பிறப்பில் எனக்குக் கிடைத்த பெரும் பாக்கியமே!

யாப்பு விதிகளைக் கருத்திற் கொள்ளாது, பக்தியுணர்வை இந் நூலில் வெளிப்படுத்துவதே எனது நோக்கமாய் இருந்தது. முரணுனவற்றைத் திருத்தவெடுத்த முயற்சிகள் வியர்த்தமாயின. அதுவும் அவனின் திருவருளேயென்று கொள்வதைத் தவிர வேறொன்றும் அறியேன். அறிஞர்கள் குற்றங்களைப் பொறுத்தருள்வாராகுக.

இந்நூல் வெளிவருதற்குத் தூண்டியாயமைந்தவர்கள், என்னுடன் கற்பிக்கும் யா/நல்லூர் ஸ்டேஷன் சி. சி. த. க. பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களுமே! அவர்க்கு நன்றியும் கடப்பாடும் உடையேன்.

அட்டையை அலங்கரிக்கும், அன்னையின் ஆலயத்தின் புகைப் படத்தை எடுத்து உதவிய எனது உழுவலன்பரும், ஆசிரியருமான திரு. எவ். ஸ்ரனிஸ்லாஸ் அவர்கட்கும் எனது உளநிறைந்த நன்றிகள் உரியன.

இந்நூலை, வெளியிடவேண்டும் என்றிடையறுது ஊக்கந்தந்ததோடு அன்னையின் அருள்கூட்ட, வெளியிட்டும்வைத்த எனது மைத்துனரும், முன்னாள் யாழ். செயலகச் சாசனக் காப்பாளருமான திரு. நாக. முருகேசன் அவர்கட்கும், அழகியமுறையில், விரைவில் அச்சிட்டுதவிய யாழ். ஆசீர்வாதம் பதிப்பகத்தின் அனைத்தூழியர்க்கும் அன்பும் நன்றியும் உடையேன். அனைவர்க்கும் அம்பிகையின் அருள் கிட்டுவதாக.

'அம்பிகையின் புகழ் எங்கணும் பொலிக'
'எல்லாப் புகழும் அம்பிகைக்கே'

வணக்கம்.

அன்பன்,
நாக. பரமசாமி

''கனகாம்பரம்,''
26, கன்னிமகள் வீதி,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.
25-9-79.

## அன்னையை அழைக்க எடுத்தாளப்பட்ட நாமங்கள்

அகல்விளக்கு, அகிமாலினி, அஞ்சுகம், அணங்கு, அணிக்கழகு, அணை, அபயகரத்தழகி, அபிராமி, அம்பிகை, அமுதமொழியாள், அரசி, அருட்கடல், அருட்குன்றம், அருட்சுனை, அருந்துணை, அருமருந்து, அலைமகள், அழகம்மை, அழகுதிரள் வடிவு, அழலேந்தி பாகத்தயர்பவள், அறம் வளர்த்த நாயகி, அன்னபூரணி, அன்னை.

ஆதாரம், ஆரணங்கு, ஆரமுது, ஆலமுண்ட கண்டனருகமர்பவள், ஆற்றுப்பெருக்கு.

இமவான் கோமளம், இளநங்கை, இனியவள், உண்ணுமுலையாள், உண்மைகளின் உட்பொருள், உண்மையுருவுடையாள், உமை, உலகளந்தவுத்தமனுடன்பிறப்பு, உறுதிப்பொருள்.

எங்கோன் மகிழ்கோதை, எந்தாய். எந்தை துணைவி, ஏந்திழை, ஏறுடையாள் பங்கு, ஒளி, ஒளிப்பிழம்பு, ஒளிவிளக்கு,

கண்ணின் மணி, கண்ணுதலான் கோமகள், கருணாகரி, கருத்தில் நிறைபவள், கரும்பு, கல்யாணசுந்தரி, கல்விச் சுரங்கம், கலைமகள், கலையரசி, கழல், கற்கண்டு, கற்பகம், கறைநின்ற கண்டன் மகிழ் கனங்குழை, கனகாம்பிகை, காண்பரிய பேரொளி, காத்தவள், காந்திமதி, காப்பவிழ்ந்த தாமரை, காபாலிபங்கை உரித்தாக்கிக் கொண்டவுமை, காமாட்சி,

கிருபாகரி, குஞ்சரி, குயின்மொழி, கைத்தலத்து நிற்பவள், கொழுந்து, கொற்றவை, கோமகள், கோபுரம், கோலமயில்.

சங்காரி, சாமளா, சாமுண்டி, சிந்தூர மேனியள், சிவக்கொழுந்து,

சுகத்திலுறுபயன், சுகபாணி, சுகம், சுந்தரி, சுரங்கம், செங்கலசம், செங்கனி, செந்தாமரையிற் சேர்ந்தவள், செம்பவளவல்லி, செய்யாள், செல்வம், செல்வி, செழுஞ்சுடர், செழுங்கமலச் செல்வி, சொக்கநாயகி, சொர்ணக் கலசம்,

ஞானம், ஞானரதி, தத்துவ விசாரதி, தயாபரி, தயாவான தத்துவம், தர்மசம்வர்த்தனி, தவம், தற்பரை தனிவழிக்குத்துணை.

தாமரை, தாய், தாயிற் சிறந்தவள், தாரகை, தானந்தமில்லாதவள், தித்திக்கும் தீம்பாலமுது, திரிபுரை, திருத்திழை, திருத்துணை, திருநிலைநாயகி, திருமகள், திருவருள்,

தூமணி, தெய்வப்பூமகள், தெய்வம், தெய்வமகள், தெளி தேன், தேவி, தேன், நடனமயர்ந்தவள், நற்கொடி, நன்முலை நாயகி, நாச்சியார், நாதனொடு கூடு நாயகி, நாயகி.

நித்திலம், நிமிர்தரு, நிமிர்ந்து நிறைபவள், நிலவு, நிறைகுடம், நிறைகுன்று, நீர்மலிவேணியன் கூறு, நீலி, நீறுதரிமார்பன்கூறு, நுண்ணூல் இடையாள், நெஞ்சக்களி, நேத்திரங்கள் மூன்றுடையாள். நேயம்,

பங்கயம், பத்தினி, பர்வதம், பாலமுது, பிடியன நடையாள், பிணிக்குமருந்து, பிறப்பறுக்கும் பெருவாழ்வு, பிறவியறுப்பவள், பின்னுசடைப்பிராட்டி, புகல், புகலிடம், புணை, புத்தொளி, புரந்தரி, புவனமெல்லாம் பூத்தவள், புவனேஸ்வரி, பூ, பூங்குழலி, பூமகள், பூவை, பெட்டகம், பெடை, பெருவிருந்து, பேரழகு பேரரசி, பேரெழில்நங்கை, பைரவி,

பொக்கிஷம், பொருட்செறிவு, பொற்குவை, பொற்பதம், பொன், பொன்மலர்,

மகிடமர்த்தனி, மகிழிடம், மகேஸ்வரி, மட்டுவார்குழலி, மணி வண்ணன் சோதரி, மதி, மதிநுதல்நங்கை, மருந்தினியாள், மயில், மரகதநிறத்தாள், மலைமகள்,

மாதங்கி, மாதுளம்பூமேனியாள், மாமணி, மாமதுரம், மாமலர், மாமறை, மாயை,

மின்னற்கொடி, மின்னுசுடர்க்கொடி, மீனாட்சி, முகில், முத்திக்கு வித்து, முதல்,

மூப்படையா முத்தமிழ், மெல்லியல், மேகம், மோகனம்,

வடிவழகன் வணங்கும் வாழ்வரசி, வடிவழகு, வடிவாம்பிகை வடிவு, வண்டார் குழல் வல்லி, வண்ணக்குடை, வரலக்ஷ்மி, வராகி, வல்லபை, வல்லவள், வல்லீ, வள்ளிக்கொடி,

வாணி, வாழ்வின் விளக்கு, வாழ்வு, விசாலாட்சி, விடிவு, வித்தகி, விமலன் திருப்பாவை, விழுத்துணை, வெள்ளோதிமம், வெளி, வேழமுகன்தாய், வேற்கண்ணி, வைகலாம்பிகை.

சுபம்.

---

# நாச்சியார் அந்தாதி

## விநாயகன் துதி

1. அப்ப மொடுகனிக ளவல்பொரியும் ஆசைமிகக்
கப்பு மரியாலைக் கரிமுகவா — முப்போதும்
சிந்தா குலந்தீர்க்கும் சீர்வெட்டுக் குளத்துறைவாள்
அந்தா தியோத வருள்.

2. ஆனை முகத்தோயே அயில்வே லழகற்கு
மானை முடித்த மாவீரா — ஏனை
யாளும்வெட் டுக்குளத்தாள் அந்தாதி யானுரைக்க
நாளுஞ்செய் நாவில் நடம்.

3. முத்திக் கொருமருந்தாய் மோனத் திருவிருந்தாய்
சித்திக்கு நாயக னுய்ச்சிறந்தாய் — சித்திவி
நாயகனே வெட்டுக்குள நாயகியாள் நலமுரைக்க
நீயருள முன்நில் நிறைந்து.

# நூல்

1. கலைமகளே கற்றவர்கள் கருத்தி னிறைபவளே
அலைமகளே வெட்டுக் குளத்தரசி — மலைமகளே
புன்னெறியே செல்லும் புழுத்தலைப் புலையனேற்கு
நன்னெறியே யென்று நிலை நாட்டு.

2. நாட்டி ஞௌிவிளக்கே நல்லவர்தம் நாவிற்புகழ்
கூட்டும்வெட் டுக்குளத்துக் கொற்றவையே — பாட்டின்
சுவையூட்டும் கல்வீச் சுரங்கமே யெண்ணிடுநல்
லவையூட்டி நந்தம்மை யாள்.

3. ஆளும்வெட் டுக்குளத்தி னம்பிகையே நின்பதத்தில்
தாழும் வரமெனக்குத் தந்தருள்வாய் — வேழமுகன்
தாயே தயாபரியே தத்துவ விசாரதியே
நாயேன டைக்கலமிந் நாள்.

4. நாளுந் தொழுதுன்னை நாடிப் பணிவதற்கு
வேளை பிறிதொன்று வேண்டுவதோ — சூழும்
பொழுதெல்லாம் வெட்டுக்குளப் பொற்குவையே
வழுவன்றே யிங்கோடி வா! [நின்பொழுதே

5. ஓடிவந் தேவீழ்வேன் உன்றன் றிருவடியைச்
சூடுவேன் வெட்டுக்குளச் சுந்தரியே — வீடுபெறு
விருப்பிற் சரணடைந்தேன் விழிமலரை என்பொருட்டுத்
திருப்பித் துயர்தன்னைத் தீர்.

6. தீர்த்த மமுதம் திருத்தலமோ பொற்கோயில்
மூர்த்தம் விருக்ஷம் முதுசொமே — கீர்த்திமிகு
வெட்டுக் குளத்து விரும்பியுறை வித்தகிநின்
பட்டுப் பதம்நம் பலம்.

7. பலங்கொள்ளு நெஞ்சும் பகைவெல்லுந் தோளும்
வலம்வந்தே யுனை நாளும் வணங்க — வளமும்
உடலுந் தருவாய் உயர்வெட்டுக் குளத்திலருட்
கடலேயாட் கொள்ளென்னைக் காத்து

8. காத்தவளே நம்மைக் கருதிப் புவனமெல்லாம்
பூத்தவளே தெய்வப் பூமகளே — ஏத்துபுகழ்
மிஞ்சுவெட் டுக்குளத்து மின்னற் கொடியேயுன்
கஞ்சமலர்ப் பாதமென்றன் காப்பு

9. காப்பவிழ்ந்த தாமரையே கண்ணுதலான் கோமகளே
மூப்படையா வெங்கள் முத்தமிழே — நாப்பழுக்க
வேண்டுவார் கூடும் வெட்டுக்குளத் தரசீ
நீண்டென்றன் நெஞ்சில் நிலை.

10. நிலைத்துவெட் டுக்குளத்தில் நிமிர்ந்து நிறைபவளே
மலைத்துவசன் பயந்த மாமணியே — அலைத்தென்னை
வாட்டி வதைக்கும் வஞ்சப் புலற்பேயை
ஓட்டி விரட்டே யுவந்து.

11. உவந்தேவெட் டுக்குளத்தில் உறைந்து மகிழ்பவளே
பவந்தன்னைத் தீர்க்கும் பர்வதமே — சுகந்தாராய்
அருமருந்தே அம்பலத்துள் ஆடும் அரனாரின்
பெருவிருந்தே பிணிக்குமருந் தே.

12. மருந்தி னினியாளே மரகத நிறத்தாளே
அருந்தே னமுத மொழியாளே — வருந்தும்
அடியார் குறைதீர்க்கு மன்னையரே வெட்டுக்குளக்
கொடியே யென்னையாண்டு கொள்.

13. கொள்ளேன் பிறதெய்வம் வாழ்வுகு டிகெடினும்
உள்ளேன் உன்னையன்றி யொருபோதும் — தள்ளேன்
நெஞ்சத்தி னின்றும் நிலைத்தவெட் டுக்குளத்து
அஞ்சுகமே யஞ்சலென வருள்.

14. அருட்சுனையே யன்பர்மனத் தமரு மகல்விளக்கே
பொருட்செறிவே பூவையே பொக்கிஷமே—மருட்சியில்லாத்
தொண்டர் பணிசெய்யும் வெட்டுக்குளத் தொல்பதிக்கற்
கண்டே யென்னையாள் கருதி.

15 கருதித் தொழுமடியார் கைத்தலத்து நிற்பவளே
பெருகுவெட் டுக்குளத்துப் பேரரசி — உருகி
வலம்வருவேன் நின்கோயில் வாழ்த்துவேன் நின்புகழை
உளங்கொண்டேன் நீயென் உயிர்.

16. உயிராம் மெய்ஞ்ஞான வுண்மைகளி னுட்பொருளே
செயிரிற் றலைப்பிரிந்த செய்யாளே — பயிர்மலிந்த
வெட்டுக் குளத்தில் விரும்பியுறை நாச்சியரே
முட்டுவா ராதருளல் முறை.

17. முறையிடுவார் தங்குறையை முனைந்தே யறுவிக்கும்
நிறைவேவெட் டுக்குளத்து நீலி — கறைகளெதும்
வாராமல் ஐம்புலற்பேய் வல்லரக்கர் என்னைச்
சேராமல் உன்பாதம் சேர்.

18. சேர்ந்தவ ளேசெந்தா மரையிற் றிருமகளே
ஓர்ந்தாரி னுள்ளத் துறைபவளே — நேர்ந்தாடும்
காவடிகள் கூடும் கவின்வெட்டுக் குளத்திறைவீ
சேவடியிற் சேர் செல்வியே.

19. செல்வமே தேனே செழுஞ்சுடரே செம்பவள
வல்லியே நல்ல வழித்துணையே — வள்ளிக்
கொடியே மலிவெட்டுக் குளத்து மகேஸ்வரியே
அடியே னடைக்கல மே.

0. அடைக்கு மிடியின் அருந்துணையே வண்ணக்
குடையேவெட் டுக்குளத்துக் கோபுரமே — பெடையே
ஆர்த்த பிறவி யறுப்பவளே யுன்னிடத்தே
யீர்த்தாண்டு கொள்வா யெனை.

21. என்னையாட் கொள்ள ஏனிந்தத் தாமதமோ
அன்னேவெட் டுக்குளத்து ஆரமுதே — பொன்னே
கோமகளே யுன்பதத்திற் கொள்ளத் தவறுவதென் ?
பூமகளே யீதென்ன புதிர் ?

22. புதிரேநிறை வாழ்க்கைப் புயலி லகப்பட்டு
எதிரேற வியலாது ஏங்குகிறேன் — கதிர்வேலன்
உண்ணு முலையாளே உமையேவெட் டுக்குளத்தில்
கண்ணாரக் காண்ப தெப்போ ?

23. எப்போது முன்னினைவே எவ்விடமு நின்மயமே
முப்போது முன்நாமம் மொழிவேன் — அப்புநிறை
வெட்டுக் குளத்து வேற்கண்ணாய் நின்பதத்தில்
அட்டியின்றி யேயென்னை ஆளே.

24 அணையே அணிக்கழகே அஞ்சுந் தனிவழிக்குத்
துணையேவெட் டுக்குளத்துத் தூமணியே — புணையே
சுந்தரியே யெந்தை துணைவியென் வல்வினையை
வந்தரியே தாநல் வரம்.

25. வரலக்ஷ்மி யென்றுன்னை வாயார வாழ்த்துபவர்
குரலிற் குழையும் கொழுந்தே — அரனூர்
மருங்கி லணிசெய்து மகிழ்வெட்டுக் குளத்துறையும்
கரும்பே யெனைச்சேருன் கால்

26. கால னெனைநாடிக் கடுகி வரும்போதுன்
காலிற் சேர்த்தென்னைக் காவாய் — கோல
மயிலேவெட் டுக்குளத்து மாதுளம்பூ மேனியளே
குயிலேகு வளைக்கண் ணி யே.

27. கண்ணின் மணியே கருதரிய வெட்டுக்குளப்
பெண்ணிற் பெருந்தக்க பேரழகே — நுண்ணூல்
இடையாளே வல்ல இமவான்றன் கோமளமே
விடையேறி யந்தகனை வீழ்த்து.

28. வீழ்வேனுன் பாதார விந்தத்தில் வெட்டுக்குள
வாழ்வே மகிட மர்த்தனியே — தாழ்வேதும்
வாரா தெனைக்காக்க வல்லவளே யுன்னையென்றும்
ஓராதார் நெஞ்சத் தொளி.

29. ஒளியே யொளிப்பிழம்பே யுனையுணர்வார் நெஞ்சக்
களியேவெட் டுக்குளத்துக் கலையரசி — எளியேன்
நெஞ்சத் தடத்து நிறையாத ஆமேனே
கஞ்சத் தனந்தானே காண்.

30. காணும் இடமெல்லாம் ஞான ரதியே நீ
பூணும் அணியெனக்கும் பூத்தருளே — வாணி
தொழுவார்க் கருள்வெட் டுக் குளத்துன் திருப்பதத்தே
விழுவார்க்குத் தீர்ப்பாய் வினை.

31. வினைதன்னைச் செய்வேன் விளைக்கும் பவப்பயிர்கள்
தனையறுக்கும் தாயேநற் சாமுண் டீ — எனைக்காவாய்
குட்டித் தலைவணங்கிக் கூடுவார் குறைதீர்க்கும்
வெட்டுக் குளத்துவெளி யே.

32. வெளியில் நடஞ்செய்யும் விமலன் திருப்பாவாய்
தெளிவேவெட் டுக்குளத்துத் தெய்வமே — அளிசூழும்
தார்கொன்றை சூடும் தாயேநின் பாதத்திற்
சேர்த்தென்னை யாள்வதுன் திறம்.

33. திறந்த மனத்தோடு சேவடியைப் பூசிக்கும்
சிறந்தடியார் சிந்தனையுட் டேனே — பிறந்த
பிறப்பறுக்கும் வெட்டுக்குளப் பெருவாழ்வே என்னை
மறுப்பின்றி யாள்வைத்து மனம்.

34. மனத்தகத் தேயன்பர் மகிழும் விரிசடையோன்
தனத்தகத் தேவாழும் தாமரையே — நினைத்துவழி
பட்டுயர்வார் கூடும் வெட்டுக்குளப் பதிவாழ்
பெட்டகமே என்னகுறை பிறிது.

35. பிறிதொன்றே யுன்னையல்லாற் பேணு வரமெனக்கு
நிறைகுன்றே நீயென்றும் தாராய் — கறைநின்ற
கண்டன்ம கிழ்வெட்டுக் குளத்துக் கனங்குழையே
வண்டார் குழல்வல் லியே.

36. வல்லிவ ராகிவடி வாம்பிகையே என்றெல்லாம்
சொல்லித் துதிப்பார் துயர்தீர்ப்பாய் — அல்லி
மலரும்வெட் டுக்குளத்து மாதங்கி யென்வாழ்வு
புலரும் வகையொன்று புகல்.

37. புகலிடமே திக்கற்றோர் பொருந்தும் திருத்துணையே
மகிழிடமே மாயே மாமறையே — அகழ்வாரைத்
தாங்கும்வெட் டுக்குளத்துத் தாமரையே நின்பதத்தில்
தூங்கும் வரந்தா சுகம்.

38. சுகமே சுகத்தி லுறுபயனே சொல்லருங்கற்
பகமே யெனையாளும் பைரவியே — இகமீதில்
நல்லகுடி யிற்பிறந்தார் நாடும்வெட் டுக்குளத்து
வல்லபையே வாழ்வின் கருத்தே !

39. கருத்தில் நிறைபவளே காண்பரிய பேரொளியே
திருத்திழை யேதெய்வ மகளே — கருத்தோடு
நத்து மடியார்க்கு நல்லருள்செய் வெட்டுக்குளப்
பத்தினியே நீகடைக்கண் பார்.

40. பார்த்தற் கருள்செய்த பரமனிடப் பங்கில்
நேர்த்தி யுடனமர்ந்த நித்திலமே — கீர்த்தியுள்ள
வெட்டுக் குளத்தை விரும்புமன்ன பூரணியே
பட்டுப்போம் போதருள்செய் பரிந்து.

41. பரிந்துநன் மனத்தால் பரவுவார்க் கன்றருள்
சொரிந்தே மகிழும் சுந்தரியே — நிறைந்தமனம்
உடையார் தொழும்வெட்டுக் குளத்தினுண் மையுருவை
உடையாளே நின்பதமே யுறுதி.

42. உறுதிப் பொருளுன்னை யிறுகப் பிடித்தேன்
இறுதிப் பயன்பெற்றேன் இனியென்ன — பொறுமை
உளத்தோடு தொழுவார்க ளுரித்தோடு சேர்வெட்டுக்
குளத்தாடு மயிலேநற் கொடி!

43. கொடியவ ராமைவர் கொடிபோல் எனைப் பிணித்த
மிடியகல நீயருள்செய் மீனாட்சி — வடிவழகன்
வணங்கு நிலைபெற்ற வாழ்வரசி வெட்டுக்குளத்
தணங்கேநா னுந்தனப யம்.

44. அபய கரத்தழகி அடியவரைக் காப்பதென்றே
சபத மெடுத்த சாமளையே — தபசிகளும்
கதியுறும் வண்ணம் கருதுவெட் டுக்குளத்து
மதியேநல் வாழ்வை வழங்கு.

45. வழங்கும் திருவருளே வடிவேக ருணைமழை
முழங்கிப் பொழியும் முகிலே — துலங்கும்
காஞ்சிவெட் டுக்குளத்துக் காமாட்சி யுளமிரங்கி
வாஞ்சையுட னிங்குவந் தாள்.

46. வந்தருளே யென்னையு வந்தருளே வெட்டுச்குளச்
சிந்தாகுலம் தீர்க்கும் செங்கனியே — நொந்தார்க்குத்
தித்திக்கும் தீம்பா லமுதே தெளிதேனே
முத்திக்கு வித்தே முதல்.

47. முதலும் முடிவுமிலா முருகவே டன்னைப்
புதல்வ னாய்ப்பூத்த புரந்தரியே — மதில்கள்
வானோங்கும் வெட்டுக் குளத்திலுறை வண்டறையும்
தேனோங்கு மாமலரே தேற்று.

48. தேற்றுவா ரின்றித் திகைப்புண் டலேவேனை
ஆற்றுப் படுத்தும் ஆரணங்கே — ஆற்றுப்
பெருக்கேவெட் டுக்குளமாம் பேரம்ப லத்திலுயர்
நிருத்தமிடு வாய்மலநீ ருக்கு.

49. நீறுமலி மேனியனும் நீர்மலிந்த வேணியனின்
கூருய்நி றைவெட்டுக் குளப்பதியின் — பேருய்
உயர்ந்தவளே சங்காரி ஊழிப் பெருநடனம்
அயர்ந்தவளே வா ஆதரி

50. *ஆதரிக்க மேய்க்கும் அழகுமணி வண்ணன்றன்
சோதரியே சொர்ணக் கலசமே — தாதரியென்
ருனந்த நட்டம் அயரும்வெட் டுக்குளத்தின்
தானந்த மில்லா தவளே.

51. தவமேதொல் வெட்டுக்குளத் தாலயத்தைச் சூழ்ந்திடுவார்
பவமே தொலேக்கும் பாலமிழ்தே — அவமே
பொழுதைச் சுருக்குமிப் புல்லறிவோ னின்பாதம்
தொழுவேன் நீயென்றன் துணே.

52. துணேவனுடன் கூடும் தொல்வினேயை நீக்குதற்குப்
புணேயா யமையும் புத்தொளியே — அணேவேனுன்
பாதாரம் வெட்டுக் குளத்துப் பழம்பதியின்
ஆதாரமே நீ யரண்.

53. அரனுர் மகிழும் அகிமா லினியே
சரணீ யென்றுன் தாள்பணிவேன் — மரணம்
பிறவியிலார் கூடுவெட்டுக் குளத்துப் பெரும்பதியின்
நிறைகுடமே நில்லென்றும் நெஞ்சு.

54. நெஞ்சம் உனக்கே நிலேயாக வைத்தேன்
விஞ்சுபுகழ் வெட்டுக் குளத்துக் — குஞ்சரியே
அல்லலறுத் தென்றன் ஆசகற்றும் ஆத்தாளே
மெல்லியலே மேல்நின் பதம்.

55. பதவம் புயமே பழியைத் துரத்தும்
கதவங் கருணு கரியே — நிதமும்
வழிபட் டுயர்வார் வதிவெட் டுக்குளத்
தொளியே பிறவி ஒழி.

---

* ஆ — ஆன்மா

56. ஒழித்துப் பயத்தை யுலகுக் கருளமுதச்
செழிப்பைத் தருசெங் கலசமே — விழுத்துணை யே
சொன்மலர்ப் பாவாரம் சூடும்வெட் டுக்குளத்துப்
பொன்மலரே நின்பாதம் புகல்.

57. புகலே யுனையன்றிப் பொற்பதியாம் வெட்டுக்குளத்
தகல்விளக்கே வேறினி யாரெனக்கு — திகழ்மதியைச்
சூடும் அரவணிந்த சொக்கேசன் தன்மருங்கில்
கூடும் அருட்குன்ற மே.

58. குன்றங் கடிந்தான் கொடுசூர்க் குலமழித்தான்
உன்றன் புதல்வன் ஒளிவேலான் — என்றும்
அடியார்கள் கூடும் அழகுவெட் டுக்குளத்து
வடிவழகே தாநல்ல வாழ்வு:

59. வாழ்ந்தே யலுத்தேன் வல்லமை யெலாமழிந்து
தாழ்ந்தே யுனையடைந்தேன் தாயே — வீழ்ந்தடியார்
தேடுவெட் டுக்குளத்துத் தேவிகிரு பாகரியே
பாடும் எளியேனைப் பார்.

60. பார்த்தன்வில் லாலடித்தும் பாசுபதம் தான்கொடுத்த
நேத்திரங்கள் மூன்றுடையான் நேயமே — சாத்திரங்கள்
தேடியும் தேடொணாத் தேவியரே வெட்டுக்குளத்
தாடிமகிழ் அழகம்மை யே.

61. அம்மேயென வழைத்த அன்புச்சம் பந்தனுக்குப்
பெம்மானுடன் வந்து பேறளித்தாய் — இம்மா
நிலம்புக ழும்வெட்டுக் குளத்து நிமிர்தருவே
தளர்ந்தே னடியேனைத் தாங்கு

62. தாங்கி யுலகனைத்தும் தாவியசே வடிகளினால்
ஓங்கி யளந்த உத்தமனின் — வீங்குபுகழ்
உடன்பிறப்பே வெட்டுக்குளத் தோங்கும் புரந்தரியே
விடமானேன் சாடென் வினை.

63. வினைவழியே சென்று விதியென்று நம்பியுன்றன்
நினைவின்றி யேயழியும் நெஞ்சனென்னை — சுனையாய
வெட்டுக் குளத்தில் விரும்பி நடஞ் செய்துமகிழ்
பெட்டகமே கால்பிடித் தேன்.

64. பிடியன நடையாளே பெய்வளை மடந்தாய்
கொடியேநல் வெட்டுக் குளத்தாளே — விடிவுபெற
அமரர்சே விக்கும் ஆலமுண்ட கண்டனரு
கமர்பவளே தருவாய்நல் லாசி.

65. நல்ல மனமும் நல்லவித் தையதுவும்
வல்லசந் தானமருள் வாழ்வே — தொல்லை
இரும்பிறவி தன்னை ஈர்க்கும்வெட் டுக்குளத்துக்
கரும்பேதா ராய்நின் கழல்.

66. கழல் தொழுவார் போகாக் கவலைகளைப் போக்கும்
அழலேந்தி பாகத் தயர்பவளே — குழற்கொன்றை
சூடிவெட் டுக்குளத்திற் சுகித்துமகிழ் சுந்தரியே
மோடிசெய் யாதுதவிர் மோகம்.

67. மோகத்தைக் கொல்லும் மோகனமே யருள்பொழியும்
மேகமே சிந்தூர மேனியளே — நாகமணிந்
தாடு மரனோடு கூடிவெட் டுக்குளத்தே
யாடுங் கலையர சியே.

68. *அரசன் தருக்கை யடக்கியவன் பங்கிலுறை
இரக்கமுள்ள தாயே இளநங்காய் — பெருக்கமுள்ள
வெட்டுக் குளத்தாளே விசாலாட்சி மும்மலத்தின்
கட்டறுக்கும் காந்திமதி யே.

69. மதிநுதல் நங்காயென் மனமா சகற்றிக்
கதியருளும் கல்யாண சுந்தரியே — பதியுடனே
கலந்தாடும் வெட்டுக்குளக் கனகாம் பிகையே
நலந்தீங்கி லும்மருளை நல்கு.

70. நல்குரவு மின்பமும் நாயகியே நான்செய்த
வல்வினைக ளால்வந்த வாழ்வே — செல்வநிறை
தேன்மலியு வெட்டுத் திருக்குளத்துத் தெய்வமே
நான்வீடிவு தேடுவதெந் நாள்?

71. நாளென்ன செய்யுமென்னை நாடிவந் துற்ற
கோளென்ன செய்யுங் குயின்மொழியே — தாள்பணியும்
அன்பர்தொழு வெட்டுக்குளத் தறம்வளர்த்த நாயகியே
நின்பதமே என்றன் நிழல்.

---

*அரசன்:- அரக்கன் - இராவணன்

72. நிழலார்ந்த சோலை நிறைவெட்டுக் குளத்துக்
கழலேநின் பாதங் கைதொழுவேன் — அழலோடு
மானும் மழுவும் மதியுந் தரித்தவெங்
கோனும் மகிழ்கோதை யே.

73. கோதகல வேண்டிக் குழைந்து தொழுவார்தம்
தீதகற்றுந் திருநீலை நாயகியே — போதமாம்
பேறுதரும் வெட்டுக்குளப் பேரெழில் நங்காய்
நீறுதரி மார்பன் கூறே.

74. கூறுடைய வேடமொடு கூடியழ காயதொரு
ஏறுடையான் பங்கில் இயைபவளே — நாறுமலர்ச்
சோலைதரு தேமலர்கள் சூடியடி யார்கள்தொழும்
கோலவெட் டுக்குளத்தா ளே!

75. தாளால் அரக்கன்றன் சாய்த்த தலைவன்றன்
தோளால் அணைசொக்க நாயகியே — தாழ்வார்
தொல்லை வினைதீர்க்கும் தொல்வெட்டுக் குளத்தாளே
இல்லை யெனுதருள்செய் யினி.

76. இனியவளே யென்றன் இன்னல் களைவதற்கு
இனியெவளே நீயன்றி யெந்தாயே — முனிவர்களும்
தேடொணு வெட்டுக்குளத் தேவியே நின்னருளை
நாடினேன் செய்யென்றும் நலம்.

77. நலஞ்சிறிது மில்லா நாயேற்கு முத்தி
நலமளிக்கும் நன்முலை நாயகியே — வலம்வருவார்
குறைதீர்க்கு வெட்டுக் குளத்து மகிழ்குன்றே
கறைகள்சே ராதென்னைக் கா.

78. காமலிந்த வெட்டுக் குளத்துக் கனங்குழையே
பூமலிந்த தோளி பொன்மயிலே — காமனைக்கண்
ணலெரித்த ஆலமுண்ட நீலகண்டன் கூடிமகிழ்
*மாலெரித்த கோல மகளே.

79. கோலமா மயில்களாடும் கொண்டல் மழைபொழியும்
சீலமிகு வெட்டுக்குளச் சிவபுரியாம் - ஞாலமெல்லாம்
பூத்து மகிழும் புரந்தரியைப் பத்தியொடு
ஏத்தியுரம் பேணுபதி யே.

---

*மால் - மயக்கம்

80. பதியாய் நிறைந்து பழவினை கள்நலிய
நதிசூடி யாடும் நம்பனொடு — ச்ருதியோடு
கலந்து நடமாடும் கமழ்வெட்டுக் குளத்திறைவீ
நலிந்தே னெனையாள் நயந்து.

81. நயந்தார்க் கருள்பலவும் நல்குபுவ னேஸ்வரியாள்
பயந்தரு மழுவுடைப் பரமனொடு — வியந்தார்
பரவுவெட் டுக்குளத்தே பதந்தூக்கி யாடிப்பல்
வரமுந் தருவாள் வலிந்து.

82. வலிகெடுத்தார் தீயரக்கன் வரையசைத்த ஞான்று
வலிகெடுத்தாய் நீவல்ல மகிடனையே — மலியும்
பத்தர்கள் கூடும் பதிவெட்டுக் குளத்தினிலே
நித்தமருள் பொழியு நிலவே.

83. நிலவைச் சடையில் தரித்த நிமலனொடு
குலவும் பதிவெட்டுக் குளத்தே — உலவும்
மின்னுஞ் சுடர்க்கொடியாம் மேனியளே நல்லருள்செய்
பின்னு சடைப்பிராட்டி யே.

84. சடையோ கருமேகம் தாள்கமல மன்னப்
பெடையோ வெனுமாறு பேரழகு — விடையோன்
பாகத்தமர் வெட்டுக் குளத்துமலர் பங்கயமே
வேகங் கெடுக்கும் விடிவே.

85. விடிவேயென் வாழ்வின் விளக்கே யழகுதிரள்
வடிவேயருள் வைக லாம்பிகையே — மிடியகல
வேண்டித் தொழுதடியார் வீழும்வெட் டுக்குளத்தில்
தாண்டவஞ்செய் தாமரை யே!

86. தாமரையி லயனுமரி தானவரும் தேடரிய
பூமருவும் பொற்பாதப் பூங்குழலி — தேமலியும்
பூமலிந்த வெட்டுக் குளத்துப் புரிவாழும்
சாமளை நின் பாதம் சரண்.

87. சரணீவெட் டுக்குளத்துத் தர்மசம் வர்த்தனியே
அரணீயெப் போது மடியேற்கு — புரநீறு
படவெரித்த வீசன் பாம்பணியுங் கோமான்
இடமெடுத்த சுகபாணி யே.

88. சுகபாணி யபிராமி சொக்கநா தர்சுகிக்கும்
மகளாய்நீ வீற்றிருக்கும் மாண்புதனை — தகவாய் நான்
திறமுரைக்க வழியறியேன் திகழ்வெட் டுக்குளத்தில்
உறைபவளே யுன்னை யுணர்த்து.

89 உணர்வாய்க் கலந்துன் உணர்வே யறிந்துன்
னுணர்வே யுணரும் உணர்வறியேன் — உணர்வழிந்து
பிரியும்போ துன்நாமம் பேசும் திருவருளைப்
புரிவெட்டுக் குளத்துப் பூவே!

90 பூபார மானேன் பொல்லாங்கெல் லாம்புரிவேன்
*தாவார மில்லேன் தாரகையே — நாவாரத்
துதிப்பார் குறைதீர்க்கும் தூயவெட் டுக்குளத்தே
உதிக்கும் வெள்ளோதி மமே.

91. ஓதி யுலகுக்கோர் ஒண்பொரு ளாகிமெய்ச்
சோதியென் றுதொழுவார் துயர்தீர்ப்பாய் — வேதங்கள்
ஓடி ஒளிக்கும் உயர்வெட்டுக் குளத்துநலம்
தேடித் தரும் செல்வியே

92. செல்வ மலிகின்ற செய்யவெட் டுக்குளத்தே
வல்வினை போக்கவென வாய்த்தவளே — கல்மனமும்
கரைத்தாள வல்ல காபாலி பங்கை
உரித்தாக்கிக் கொண்ட வுமையே

93. உமையேவெட் டுக்குளத்தின் உயர்தனிச் செம்பொன்னே
நமையேயாட் கொள்ளவந்த நாயகியே — இமையவரும்
திசைமுகனும் மாலும் தெரியவொண்ணு ஈசற்கு
இசைமுகத்த ஏந்திழை யே.

94. ஏந்தி யறுமுகனை ஈந்தாய் புவனமெல்லாம்
மாந்தி யவனருளை மன்னுதற்காய் — சாந்தியுடன்
வாழ்வோர் வதிவெட்டுக் குளத்திலுறை நல்வாழ்வே
தாழ்வுவா ராதருளல் தயவு.

95. தயாவான தத்துவமாய்த் தாயிற் சிறந்தவளாய்ச்
செயமான செல்வஞ் சேர்ப்பவளாய் — தவமார்ந்த
சீலர் தொழுவெட்டுக் குளத்துச்சி வக்கொழுந்தாய்ச்
சால வொளிர் ஞானமே

---

* தாவாரம் — துன்பத்தில் பங்கு.

96 ஞான நலமுணர்த்த ஞானசம் பந்தனெனும்
பானல் வாயானொரு பாலகற்கு — கோனோடு
ஊர்ந்தாய்வெட் டுக்குளத்தே யுவந்துதரித் தின்னருளை
ஈந்தருளத் தாமதம் என்னே !

97. எந்நே ரமுமுனது இனிக்கும் பதமலரை
அன்னே யான்சூட அருள்தாராய் — மன்னே
மாமதுர மேவெட்டுக் குளத்து மகிழ்மாமணியே
யாமறியத் தாவனுபூ தி.

98. பூத [illegible] புடைசூழ வீற்றிருக்கும்
நாதனொடுகூடு நாயகியே — வேதநெறி
தழைக்குவெட் டுக்குளத்துத் தற்பரையே நின்பதத்தில்
இளைப்பாற்றிக் கொள்ளென்னை ஏற்று.

99. ஏற்றாய் அடியேனை இதமாம்ப தாம்புயத்தில்
சேர்த்தாய் செழுங்கமலச் செல்வியே — ஆற்றா
தழுவார் துயரகற்றும் அருள்வெட்டுக் குளத்தைநினைந்
தெழுவார்க் கிடரில்லை யே.

100. இல்லையெனுங் கொடுமைத் தொல்லைகளெல் லாந்துரத்த
வல்லவ ளேமட்டு வார்குழலி — எல்லையிலாப்
பொற்பதமே வெட்டுக்குளப் பொக்கிஷமே பூவைநிகர்
கற்பகமே தாநற் கலை.

— சுப மங்களம் —

ஓம் சக்தி !

ஆசீர்வாதம் அச்சகம், யாழ்ப்பாணம். 2156 - 79